**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 8 August 2017

# அனைத்துலக விவாதப் போட்டியில் தேசிய பல்கலைக்கழகம் வெற்றி

ஐக்கிய ஆசிய விவாதப் போட்டியில் 18 நாடுகளைச் சேர்ந்த 73 குழுக்களை வென்று முதல் நிலையைப் பிடித்துள்ளது சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த குழு.

வெற்றி பெற்ற குழு பல்கலைக்கழகம் அனுப்பி வைத்த மூன்று குழுக்களில் ஒன்று. இக்குழு அன்டெனியோ டி மணிலா குழுவை இறுதிச் சுற்றில் சென்ற வெள்ளிக்கிழமையன்று சந்தித்தது. கம்போடியா நாட்டின் சியாம் ரீப்பில் நடைபெற்ற இப்போட்டியில் ஒன்பது நடுவர்களில் எட்டு பேர் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகக் குழு வெற்றி பெற்றதாக முடிவெடுத்தனர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.